Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 4, 2022

திங்கட்கிழமை ஜூலை 04, 2022 | ஒளி: 08 கதிர்: 039 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ரஷ்யாவுக்கு குழு விஜயம்

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கும் ரஷ்யாவின் ஆதரவைப் பெறுவது குறித்து கலந்துரையாடுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்து.

அதன்பிரகாரம், இலங்கை குழுவொன்று எதிர்வரும் 9ஆம் திகதி ரஷ்யா செல்லவுள்ளதாக அறியமுடிகின்றது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் பயணிக்கவிருக்கும் இந்தக் குழுவில், ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் கலாநிதி சமன் வீரசிங்கவும் பங்கேற்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

# தேசிய பேரிடரை பிரகடனப்படுத்த பிரதமரிடம் கோரிக்கை

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டும் கவனத்தில் எடுத்தும், தேசிய பேரிடர் நிலையைப் பிரகடனப்படுத்தி, அரச அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அதிகாரிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். தற்போதைய பொது அமைதியின்மை மோசமடைந்து, அத்தியாவசிய சேவைகளில் இருந்து அதிகாரிகள் விலகிச் சென்றால், அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி விவகாரம் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று (03) கடிதமொன்றை அனுப்பியுள்ள அந்தச் சங்கம், உரிமைகளைப் பாதுகாத்து, அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கு உரிய அதிகாரியை நியமித்து, முறையான பொறிமுறையை ஏற்படுத்துவது அவசரத் தேவையாகுமென சுட்டிக்காட்டியுள்ளது.

மாத்தறை வைத்தியசாலைக்கு சென்ற மாத்தறை பிரதேச செயலாளரை, பலவந்தமாக அறையொன்றில் தடுத்து வைத்துள்ளதுடன், நோயாளர் பராமரிப்பு சுகாதார நெறிமுறைகளை மீறும் வகையில் சுகாதார பணியாளர்கள் குழு செயற்பட்டதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தினர், எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினையே இதற்குக் காரணமாகுமென குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2


## நாமலின் யோசனையை பங்காளிகள் நிராகரித்தனர்



அரசாங்கத்தை மாற்றி, அனைவரும் ஒன்றிணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை ஒன்பது பங்காளிக் கட்சிகள் நிராகரித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களின் மூலம் அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

## இன்றும் நாளையும் 3 மணி நேர மின்வெட்டு



இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய இன்றும் (04) நாளையும் (05) 3 மணிநேர மின்வெட்டை அமல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நேற்று (03) அறிவித்தது.

தொடர்ச்சி P2



உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை; எனினும்

# முடங்கும் அபாயம்?

மக்களின் செயற்பாடுகள், பொதுப் போக்குவரத்தின் சேவைகள், திறக்கப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கைகள், பணியாளர்கள், கடமைக்கு சமூகமளிப்போர் உட்பட பொதுவாக பார்க்குமிடத்து, இவ்வாறம் நாடு, முழுமையாக முடங்கும் அபாயம் தென்படுகின்றது.

உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் எவையும் வெளியாகாவிடினும், நாடு நூற்றுக்கு 75 சதவீதத்துக்கு மேல் முடக்கப்பட்டுள்ளதைப் போலவே காட்சியளிக்கிறது. எஞ்சியிருக்கும் 25 சதவீதமும் மிகவும் அத்தியாவசிய சேவைகளுக்காக மட்டுமே, மக்கள் வெளியில் தலையைக் காட்டுகின்றனர்.

தொடர்ச்சி P2

## ஒரே சீனக் கொள்கையில் இலங்கை நிலைத்து நிற்கும்

### சீனத்தூதுவருக்கு அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



'ஒரே சீனக் கொள்கை'யில் இலங்கை தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என சீனத் தூதுவரிடம் உறுதியளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சீனாவின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் தளராத ஆதரவை உறுதிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

## வருகிறது, வருகிறது... எரிபொருள் வருகிறது

### ஜூலை 10 முதல் விநியோகம்; மலேசியாவுடன் பேச்சு




இம்மாதம் 10ஆம் திகதி முதல் மக்களுக்கு தடையின்றி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுதாக தெரிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதம், அசௌகரியங்களுக்கு மீண்டும் ஒருமுறை மன்னிப்பு கோருவதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 1,000 பஸ்கள் கூட இன்று ஓடாது



நாடு முழுவதும் 1,000 தனியார் பஸ்களே நேற்றையதினம் (03) சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகத் தெரிவித்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, 1,000க்கும் குறைவான பஸ்களே நாடளாவிய ரீதியில் இன்றையதினம் (04) சேவையில் ஈடுபடும் என்றும் எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆபிரிக்கா செல்ல முயன்ற 51 பேர் திருமலையில் கைது



ஏ.எம்.கீத், ஹஸ்பர்

நாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில், வெளிநாடொன்றுக்கு செல்லமுயன்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், கிழக்கு கடலில் வைத்து 51 பேர், நேற்று (03) கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை, கோணேசபுரி கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள், ஆபிரிக்க கண்டத்திலுள்ள தியாகோ கர்கியா எனும் தீவுக்குச் செல்லமுயன்றதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதென கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

எரிபொருள் நெருக்கடி

## பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை



அனைத்து அரச மற்றும் அரச அங்கிகாரம் வழங்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு இன்று (04) முதல் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விடுமுறை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கோட்டாவுக்கு மூளை சரியில்லை

### மக்கள் செத்து மடிகின்றனர் என்கிறார் மத்தும பண்டார

இன்று மக்கள் வீடுகளிலேயே செத்து மடிகிறார்கள். இப்போது இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன, பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு இல்லாமல் வரிசையில் இறப்பார்களோ தெரியாது. பொறுப்பற்று எதேச்சதிகாரமாக செயற்பட்ட வண்ணமுள்ளார் ஜனாதிபதி.

தொடர்ச்சி P2

எரிவாயு கொள்வனவு விவகாரம்:

## லிட்ரோ அதிகாரிகளுக்கு கோப் குழு அழைப்பு



எரிவாயு கொள்வனவில் ஏதேனும் முரண்பாடுகள் உள்ளனவா என்பது தொடர்பில் விசாரிப்பதற்காக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகள், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப்) அழைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# புத்தளத்தில் மின்சார சைக்கிள் தயாரிப்பு



ரஸீன் ரஸ்மின்

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால் பலரும் மின்சார வாகனங்களை பயன்படுத்துவதில் கூடுதலான ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர்.

மின்சாரத்தில் இயங்கும் சைக்கிள்கள் மீதான மக்களின் கவனம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

புத்தளம் நகரைச் சேர்ந்த அப்துல் லதீப் முஹம்மது ரியாஸ் என்பவர் மின்சாரத்தில் ஓடக்கூடிய சைக்கிளைத் தயாரித்துள்ளார். தனது சொந்தத் தேவைகளுக்காக மட்டுமே மேற்படி மின்சார சைக்கிளைத் தயாரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், அதனூடாக செலவுகளைக் குறைத்து, மேலதிக பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சைக்கிளை ஒருமுறை சார்ஜ் செய்தால் சுமார் 20 முதல் 25 கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்யலாம். இதில் ஜீ.பி.எஸ் வசதியும் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்தச் சைக்கிள் எத்தனை கிலோ மீற்றர் தூரம் ஓடும் என்பதை சரியாக கணிக்கலாம்.

தொடர்ச்சி P2



## 22ஆவது திருத்த வரைவு பிரச்சினைக்குரியது

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்ட வரைவு பிரச்சினைக்குரியது என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் 19ஆவது அரசியலமைப்பை ஒத்திருந்தால் மாத்திரமே தமது தரப்பு அதற்கு ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேசிய பேரிடரை பிரகடனப்படுத்த பிரதமரிடம் கோரிக்கை

எரிபொருள் விநியோகத்தை முறைப்படுத்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து அதனை அமல்படுத்தும் போது, அதனைக் கண்காணித்த வடமேல் மாகாண ஆளுநரின் செயலாளராக இருந்தவரின் கடமைகளுக்கு குருநாகல் மேயர், சிலர் தலையிட்டு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இவ்விரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் சட்டத்தை உடனடியாக அமல்படுத்த அரசாங்கம் தயங்கினால், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் பொது நிர்வாக சேவைகள் சங்கம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

# நாமலின் யோசனையை பங்காளிகள் நிராகரித்தனர்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரவுடன் நடத்தப்பட்ட தனியான சந்திப்பில் இந்த யோசனை குறித்து நாமல் எம்.பி தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஒன்பது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போது வாசுதேவ எம்.பி, கட்சித் தலைவர்களுக்கு நாமலின் யோசனையை அறிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை அனைத்து கட்சி தலைவர்களும் கடுமையாக நிராகரித்துள்ளதுடன், அங்கு இந்த நெருக்கடிக்கு ராஜபக்ஷர்களே காரணம் என்பதால் அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாதென அங்கு தெரிவித்துள்ளனர்.

எனவே, நாமல் எம்.பியுடன் எவ்வித கலந்துரையாடலையும் நடத்துவதில்லை என பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றும் நாளையும் 3 மணி நேர மின்வெட்டு

அதற்கமைய, ஏ முதல் டபிள்யூ ஆகிய 20 வலயங்களில் பகல் வேளையில் 1 மணி நேரம் 40 நிமிடங்களும், இரவு வேளையில் 1 மணி நேரம் 20 நிமிடங்களும் மின் வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சீசீ வலயங்களில் காலை 6 மணிமுதல் 8.30 மணிவரையான காலப்பகுதியில் 2 மணிநேரம் 30 நிமிட மின்வெட்டும், எம்,என்,ஓ,எக்ஸ்,வை, ஸெட் ஆகிய வலயங்களில் காலை 5.30 மணிமுதல் 8.30 மணிவரை 3 மணிநேர மின்வெட்டும் அமலாகும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# 1,000 பஸ்கள் கூட இன்று ஓடாது

மக்கள் தமது வாகனத்தை விட்டுவிட்டு பஸ் போக்குவரத்துக்கு மாறியுள்ளனர் என்றும் ஓட்டோ தொழில் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் தெரிவித்த அவர், அதேசமயம் நோயாளிகளும் மருத்துவ சிகிச்சை பெறுவதில் சிரமப்படுகின்றனர் என்றார்

டீசல் கையிருப்பு தீர்ந்து வருவதால், இந்த நேரத்தில் பஸ்களை இயக்குவதற்கு போதுமான அளவு டீசலை விநியோகிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவறிவிட்டது என்றும் சுட்டிக்காட்டினார்.

பொது போக்குவரத்து சேவையை தொடர்ந்து கொண்டு செல்லும் நோக்கில், தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களில் எரிபொருளை வழங்குமாறு அரசாங்கம் இதற்கு முன்னர் அறிவுறுத்தியது.

எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் சில பிரதேச டிப்போக்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கப்படுவதோடு சில இடங்களில் எரிபொருள் வழங்க மறுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

# ஆபிரிக்கா செல்லமுயன்ற 51 பேர் திருமலையில் கைது

கைது செய்யப்பட்ட அனைவரும், திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடம், நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அந்த 51 பேரில், 43 ஆண்களும் 08 பெண்களும் உள்ளடங்களாக சிறுவர்கள் மூவரும், சிறுமிகள் இருவரும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் நிலாவெளி, நீர்கொழும்பு, திருகோணமலை, பலாங்கொடை, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த திருகோணமலை துறைமுகப் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# புத்தளத்தில் மின்சார சைக்கிள் தயாரிப்பு

12 வோல்ட் பெட்டரியை பயன்படுத்தி அதிலிருந்து ஏ.சி மின்சாரமாக மாற்றப்பட்டுள்ளது. அந்தச் சைக்கிளானது மோட்டர் ஒன்றின் உதவியுடன் இயங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பொருத்தப்பட்டுள்ள பற்றரிக்கு மேலதிகமாக இன்னொரு பற்றரியை பொருத்தினால் சுமார் 50 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்கலாம் என்றார்.

பெற்றரியில் மின்சாரம் குறைவடையுமாயின், பெடல் மூலமும் இந்தச் சைக்கிளை இயக்க முடியும் என்றார். தற்போதைய நிலைமையில், மின்சார சைக்கிளை மூன்று இலட்சம் முதல் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனாலும், ஒரு இலட்சம் ரூபாய்க்கும் குறைவான செலவில் மேற்படி மின்சார சைக்கிளைத் தயாரித்துள்ளதாகவும் பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஏற்ற



வகையில் மேற்படி மின்சார சைக்கிளை தயாரிக்க முடியும் எனவும் அப்துல் லதீப் முஹம்மது ரியாஸ் நம்பிக்கை வெளியிட்டார்.

# முடங்கும் அபாயம்?

பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட பெரும்பாலான கடைகள் இழுத்து மூடப்பட்டுள்ளன. சிறிய கடைகள் ஆங்காங்கே ஒன்றிரண்டு திறந்துவைக்கப்பட்டுள்ளன.

ஹோட்டல்களில் பெரும்பாலானவை மூடப்பட்டுள்ளன. பிரதான வீதிகளில், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்களில் இரண்டொன்றை தவிர, போக்குவரத்தும் முறையாக இடம்பெறுவதில்லை.

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்களின் ஓட்டங்கள் குறைந்துள்ளன. தனியார் வாகனங்கள் சிலவும் 'அத்தியாவசிய சேவைகள்' என எழுதி ஒட்டப்பட்டிருக்கும் பாரவூர்திகள் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

பிரதான நகரங்களில் எரிபொருள் நிலையங்களுக்கு இருமருக்கிலும் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன. கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் எரிபொருளுக்கான டோக்கன்கள் வழங்கப்பட்டு உள்ளமையால் ஒருசில இடங்களில் வரிசைகளை காணக் கிடைப்பதில்லை.

பெரும் நகரங்களுக்கு வெளியே, கோவில்கள், கடைகள், தனிப்பட்ட வகுப்புகளுக்குச் செல்வோர், நடந்து சென்று கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் கையில் இருக்கும் பணத்துக்கு ஏற்றவகையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்துகொண்டு நடந்து செல்கின்றனர்.

இதற்கிடையே சைக்கிள்களின் பாவனை அதிகரித்துள்ளது. அதேநேரம், சைக்கிள்கள் திருத்தும் சிறிய கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக பார்க்குமிடத்து, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத முடக்கத்துக்குள் நாடு தள்ளப்பட்டு இருக்கிறது.

அவசரமாக வைத்திய சாலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியவர்களைக் கூட, கொண்டு செல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், எரிபொருள் நெருக்கடிக்கான தீர்வுகள் இன்னுமே முழுமையாக வழங்கப்படவில்லை. இருக்கும் எரிபொருளையும் வரிசையில் நின்று செலவழிப்பதை விடவும் வீட்டுக்குள் சென்றுவிடலாமென பலரும் கூறுவதை கேள்விப்படுகின்றோம்.

இவ்வாறான நிலையில், இவ்வாரம் நாடு முழுமையாக ஸ்தம்பிதமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கம் அதிகாரபூர்வமாக தீர்மானம் எடுக்காவிடினும், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாவிடின் நாடு தானாகவே முடக்கப்பட்டுவிடும்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகள், தனியார்துறை பொதுப் போக்குவரத்து, சொந்த வாகனங்களை அல்லது அலுவலக வாகனங்களை பயன்படுத்துவோர், சுகாதார துறையினர் கடுமையான பாதிப்புகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

கல்வி உள்ளிட்ட துறைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. எரிபொருளை இறக்குமதி செய்யும் வரை இந்த அபாய நிலை தொடரும்.

எரிபொருள் பிரச்சினைக்கு இவ்வாரத்துக்குள் முறையான தீர்வொன்று கிடைக்காவிடின், அடுத்தடுத்த வாரங்களில் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# பாடசாலைகளுக்கு மீண்டும் விடுமுறை

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடியில் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து சூம் தொழில்நுட்பம் மூலம் நேற்று (03) நடத்தப்பட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் அதிகாரிகள், மாகாண கல்வி பணிப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கு இடையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் வருகை தொடர்பிலும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சால் எரிபொருள் விநியோகம் குறித்து வெளியிடப்பட்ட அறிவித்தலைக் கருத்திற்கொண்டும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு, நேற்று (03) தெரிவித்தது.

இந்தவாரம் வழங்கப்படும் விடுமுறையை எதிர்வரும் காலத்தில் வழங்கப்படவுள்ள விடுமுறையில் ஈடுசெய்வதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

# கோட்டாவுக்கு மூளை சரியில்லை

கோட்டாபய ராஜபக்ஷவின் மூளை சரியில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயங்களை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் தற்போது அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை சமர்ப்பித்துள்ளது. 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட சர்வாதிகார ஆட்சியை அகற்றிவிட்டு 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருமாறு இந்நாட்டு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நாட்டு மக்கள் போராடிக் கொண்டிருக்கும் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மே 11 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வந்து, நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்போம் என்று கூறினார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்குப் பதிலாக 19 அதிகாரங்களுடன் ஒப்பிடும் போது, இது அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் 19 இல் இருக்கவில்லை; 22 இல் உண்டு.

பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது மற்றும் பிரதமரின் அறிவுறுத்தலின் படி அமைச்சரவையை நியமிப்பது என்ற 19 இல் உள்ள ஏற்பாடு திருத்தப்பட்டுள்ளது. 19 இல் ஜனாதிபதிக்கு அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என கூறப்பட்ட நிலையில், தற்போது 22 இல் ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த ஜனாதிபதி மே 11 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு சொன்ன கதை பொய்யானது; மக்களை தினமும் ஏமாற்றி வருகின்றார்.

சபாநாயகர் நியமிப்பதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும் என 22 இல் உள்ளது. அதாவது இந்த அரசாங்கத்தால் ஏழு பேரும் மற்ற எதிர்க்கட்சி குழுக்களுக்கு மூன்று பேருமே நியமிக்க முடியும். அப்படியானால் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் விஜேதாஸ ராஜபக்ஷவும் இந்நாட்டு மக்களை ஏமாற்றி விட்டனர். விஜேதாஸ ராஜபக்ஷ, மகா சங்கத் தலைமை பீடங்களுக்குச் சென்று, மத தலைவர்களுக்கு வழங்கியது அல்ல, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. மகா தேரர்களையும் இவர்கள் ஏமாற்றியுள்ளனர் என்றார்.

# ரஷ்யாவுக்கு குழு விஜயம்

இவ்விருவர் அடங்கிய குழு, அந்நாட்டு அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் 15ஆம் திகதி வரை ஆரம்பக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

# ஒரே சீனக் கொள்கையில் இலங்கை நிலைத்து நிற்கும்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வெள்ளிக்கிழமை (30) சந்தித்துள்ளார் என அமைச்சு நேற்று (03) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்போதே இவ்விடயத்தைத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கான சீனாவின் தொடர்ச்சியான உதவிகளை பாராட்டியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்துள்ள எரிபொருள், உணவு, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தூதுவருக்குத் தெரிவித்தார்.

இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்காக, இருதரப்புப் பங்காளிகளும் சர்வதேச முகவர்களும் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஒரே சீனக் கொள்கையில் இலங்கை தொடர்ந்தும் நிலைத்து நிற்கும் என சீனத் தூதுவரிடம் உறுதியளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீனாவின் இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் தளராத ஆதரவை உறுதியளித்தார்.

ருவாண்டாவின் கிகாலியில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் பக்க அம்சமாக இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்குத் தேவையான உதவிகள் குறித்தும் 12 நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் (சீர்திருத்தம் செய்தல்) மற்றும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் தூதுவருக்கு அவர் விளக்கினார்.

# வருகிறது, வருகிறது... எரிபொருள் வருகிறது

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் இரண்டு டீசல் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அதன் பின்னர் தொடர்ச்சியாக எரிபொருள் கிடைத்தால் ஒரு மாதத்துக்கு போதுமானதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

தலா 40,000 மெற்றிக் தொன் டீசல் கொண்டுவரும் இரண்டு கப்பல்கள் ஜூலை 8 அல்லது 9 ஆம் திகதிக்குள்ளும் ஜூலை 11 அல்லது 14 ஆம் திகதிக்குள்ளும் நாட்டை வந்தடையும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் பெற்றோலை ஏற்றி வரவுள்ள கப்பல் ஜூலை 22 அல்லது 23 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வரும் என்றும் அறிவித்தார்.

மூன்றாவது டீசல் ஏற்றுமதி ஜூலை 15 - 17 ஆம் திகதிகளுக்கு இடையில் முன்பணம் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் நாட்டுக்கு வரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜூலை 10 அல்லது அதற்கு அண்மைய காலத்தில் 50,000 மெற்றிக் தொன் பெற்றோலைப் பெறுவதற்கு மலேசியாவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், பெற்றோல் தொடர்பாக சில இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக கூறினார்.

# லிட்ரோ அதிகாரிகளுக்கு கோப் குழு அழைப்பு

லிட்ரோ நிறுவன அதிகாரிகளை நாளை (05) பிற்பகல் 2 மணிக்கு ஆஜராகுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

அதற்கமைய லிட்ரோ நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் சபை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

லிட்ரோ எரிவாயு நிறுவனம் 100,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை அதிக விலைக்கு பெற்றுக்கொண்டமை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியும் கோப் குழு உறுப்பினருமான எஸ்.எம்.மரிக்கார் கோரிக்கை விடுத்திருந்தார்.

# 22ஆவது திருத்த வரைவு பிரச்சினைக்குரியது

நேற்றையதினம் (03) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், தமது கோரிக்கைக்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்றார்

22ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ள சில யோசனைகள் தொடர்பான யோசனைகள் ஐக்கிய மக்கள் சக்தியின் நேற்றைய (03) பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது சேகரிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

19ஆவது திருத்தத்துக்கு நிகரான அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்க்கட்சிகள் எப்போதும் கோருவதாகவும் இடம்பெறவுள்ள குழுக்கூட்ட சந்திப்பின் போது இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

உத்தேச திருத்தத்தில் முன்னைய திருத்தத்தின் பல சரத்துகள் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு

மன்னார் அருள்மிகு திருக்கேதீஸ்வரர் கோவிலின் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு, நேற்று (03) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் திருக்கேதீஸ்வர கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்த தலைமையில் ஆரம்பமானது.

அத்துடன், திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கரையில் ஆறுமுக நாவலருக்கான சிலையும் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள்நுழையும் வீதியில் சுமார் 28 அடி நீளமான சிவன் சிலையும் திறந்து வைக்கப்பட்டன.

இன்றும் (04) தொடரும் எண்ணெய்க் காப்பு சாத்துதல், நாளை (05) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடையும். 6 ஆம் திகதி புதன்கிழமை காலை சுப மூகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெறவுள்ளது.

(எஸ். றொசேரியன் லெம்பேட்)

























# போதும் போதும் பதவி விலகுங்கள்

## இருவரிடமும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



இந்த அரசாங்கத்தால் இனிமேலும் தொடர்ந்து நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது. எனவே ஜனாதிபதியும் பிரதமரும் தலைமை தாங்கும் இந்த அரசாங்கம் உடனடியாக பதவி விலகுவதை தவிர வேறு மாற்று வழியில்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்தக் கொடுங்கோல் அரசாங்கத்தை அகற்றுவதற்கான மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற்காக கட்சி, நிற பேதங்களை மறந்து முன்வருமாறும் கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (03) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் தருணத்தில், நாட்டுக்கு எதிராக ஒரு கும்பலையோ, தனி நபரையோ பாதுகாப்பதை விடுத்து, நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் தங்களை அர்ப்பணிக்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடமும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

இந்நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளை ஐந்து நாள்களில் ஐந்து மாதங்களில் உடனடியாக தீர்க்க முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான பொய்களை நம்பி ஏமாற வேண்டாம் எனவும், இந்நாட்டு மக்களை தொடர்ந்தும் யாரேனும் ஏமாற்றவோ அல்லது தவறாக வழிநடத்தவோ முயற்சித்தால் அது துரதிர்ஷ்டவசமான நிலை எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகுமெனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இதற்கப்பால் இந்நாட்டை கட்டியெழுப்புவோம் எனக் கூறும் பேச்சு மாயையானது எனவும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு சுற்றுலாப் பயணியை திட்டியமை குறித்து

# ஐ.ஜி.பியிடம் முறைப்பாடு

காலியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில், எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணியிடம் பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை முறைப்பாடு செய்துள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, சுற்றுலாப் பயணியை திருப்பி அனுப்பும் வீடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி வந்தது. இதனையடுத்தே சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் தலைவர் பிரியாந்த பெர்னாண்டோ, ஐ.ஜி.பியிடம் முறையிட்டுள்ளார்.

“இந்த வீடியோவை மில்லியன் கணக்கானோர் பார்வையிட்டுள்ளனர். இலங்கை மாத்திரமன்றி வெளிநாடுகளில் உள்ளவர்களும் இதனை பார்வையிட்டுள்ளனர். எமது நாட்டின் சுற்றுலாத்துறை தொடர்பில் இது எதிர்மறையான கருத்தை உருவாக்கியுள்ளது” எனவும் பிரியாந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சுற்றுலாத் துறையில் வருமானத்தைக் கொண்டு சரி செய்யலாம். இவ்வாறான நிலையில் சுற்றுலாத் துறையில் நான்கு மில்லியனுக்கும் அதிகமானோர் இலங்கையில் பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, சுற்றுலாப் பயணி ஒருவரிடம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் இவ்வாறு நடந்து கொள்வது, ஒட்டுமொத்த பொலிஸ் திணைக்களத்துக்கும் அகௌரவத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரியாந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு வருடமாகியும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை



நாட்டின் நெருக்கடி நிலைமைகளை தீர்ப்பதற்கு சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென மாநாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து ஒரு வருட காலம் கடந்துள்ள போதிலும், இது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பி குற்றம் சுமத்தியுள்ளார்

மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். வரிசைகளில் நின்றவாறே சிலர் உயிரிழந்துள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லை. மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு எரிபொருள் இல்லை. சமைப்பதற்கு சமையல் எரிவாயு இல்லை. உணவுத் தட்டுப்பாடு, பொருட்களின் விலை உயர்வு என்பனவற்றால் விவசாயத்துறை பாரதூரமான முறையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவற்றுக்கெல்லாம் அரசாங்கம் எடுத்த தீர்மானங்களே காரணம். அரசாங்கமே இப்பிரச்சினைகளை உருவாக்கியது. வரிசையில் நிற்கும் மக்கள் அரசாங்கத்தை திட்டி தீர்ப்பதற்கு அரசாங்கமே காரணம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரசாயன உரம் மீதான தடையை விதித்த இரு வாரங்களின் பின்னர், தொலைபேசியில் அவருடன் கலந்துரையாடி இது தொடர்பில் எடுத்துரைத்தேன் எனவும் மைத்திரி கூறினார்.

எனவே, இந்த நிலை துரதிர்ஷ்டவசமானது. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை பலப்படுத்துவதற்கு பதிலாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்குத்தான் நான் முயற்சித்தேன்.

அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். அரசியலமைப்பு பேரவையில் அனைத்து கட்சி தலைவர்களும் உள்ளடக்கப்பட வேண்டும். அதுபோல அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 15ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பு பேரவையால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஜனாதிபதி இணங்க வேண்டும். இது தொடர்பான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இருமுறை சந்தித்து கலந்துரையாடி இருந்தோம். எனினும், அரசாங்கத்தை நாங்கள் பாதுகாக்கிறோம். அரசாங்கத்துக்கு நாம் முட்டு கொடுக்கிறோம் என்றெல்லாம் எங்கள் மீது விமர்சனங்களை முன்வைத்தார்கள் என்றார்.

# சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற ரணில் களத்தில்




நாடு முகம் கொடுத்து வரும் பொருளாதார சவாலை வெற்றி கொள்வதற்கு, அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வது ஒரே வழி என தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சி தவிசாளர் வஜிர அபேவர்தன, இதற்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள விரிவான வேலை திட்டம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

தற்போது கேஸ், எரிபொருள், மின்சாரம், உணவு தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு அப்பால் பாரதூரமான நிலைக்கு நாடு முகங்கொடுத்து வருவதாகவும் வீழ்ந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்புவதே பிரதான சவால் எனவும் தெரிவித்தார்.

பொருளாதாரம் முற்றாக வீழ்ந்த அந்நிய செலாவணி கையிருப்பே இல்லாத நாட்டை மீள கட்டியிருப்பது இலகுவான காரியம் அல்ல. பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தபோது அதனை தடுப்பதற்குரிய வேலை திட்டங்களை முன்னெடுத்து இருந்தால் நாடு நிலைமைக்கு முகம் கொடுத்திருக்காது எனவும் தெரிவித்தார்.

# சந்திப்பு



வ.சக்தி

நோர்வே வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவிற்கான பிரதிப் பணிப்பாளர் S Tenfjord இற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இரா.சாணக்கியன் நோர்வேக்கு விஜயம் செய்துள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் காணப்படும் நெருக்கடிகள், அதனால் ஏற்படுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பிலும், இவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# மட்டி எடுத்த பெண் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மட்டி எடுத்துக் கொண்டிருந்த 60 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டி எடுத்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக இவர் மரணமடைந்துள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கிண்ணையடி, சுங்கான்கேணி பகுதியைச் சேர்ந்த 60 வயதான பெண்ணே, சனிக்கிழமை (02) மரணமடைந்துள்ளார் எனத் தெரிவித்த வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# தாழ்நில பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு அபாயம்

வெள்ளப்பெருக்கு அபாயம் காரணமாக ஜின் கங்கைக்கு அருகில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்களில் வசிப்போர் குறிப்பாக அந்தப் பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமென நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது

ஜின் கங்கைக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் உள்ள நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கு அபாயம் காணப்படுவதாகவும் குறிப்பாக, வெளிவிட்ட திவிதுர, பத்தேகம, கொடபொல, ஹிக்கடுவ, நியங்கம, நெலுவ, தவலம, அக்மீமன, நாகொட, அல்பிடிய ஆகிய பிரதேசங்களில் வசிப்போர் வெள்ளப்பெருக்கு அபாயம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### கதிர்காமத்துக்கான

# காட்டுப்பாதை திறக்கிறது

■ சகா

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை, இம்மாதம் ஜூலை 22ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 05ஆம் திகதி வரை திறக்கப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம், அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 22ஆம் திகதி உகந்தை முருகன் கோவிலில் காலை 6 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளை தொடர்ந்து, காலை 7 மணிக்கு உத்தியோகபூர்வமாக காட்டுவழிப்பாதை யாத்திரிகர்களுக்காக திறந்துவிடப்பட இருக்கின்றது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும் பாதை தொடர்ந்து வரும் 14 நாள்கள் காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு, மாலை 3 மணிக்கு மூடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம், இம்மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.



அதேவேளை, உகந்தை மலை முருகன் கோவிலின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இம்மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

மேற்படிகூட்டத்தில் அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், மொனராகல மாவட்டச் செயலக பிரதிநிதி, கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள், பாணமை விகாராதிபதி வண. சந்திரரத்ன ஹிமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### எரிபொருள் இன்மையால்

# சுகாதாரப் பிரிவினர் பலர் ஏமாற்றம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமாக மாஞ்சோலை பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் காணப்படுகின்றது.

அரசின் அறிவிப்புக்கு அமைய, மாவட்டத்தில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களுக்கான பெற்றோல் வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் (02) முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா, துணுக்காய், மாந்தை கிழக்கு, மல்லாவி, ஒட்டுசுட்டான் போன்ற தூர பிரதேசங்களில் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளாரின் ஒழுங்குபடுத்தலில் பரல்களில் நிரப்பப்பட்டு, இராணுவப் பாதுகாப்புடன், அந்தந்தப் பிராந்திய சுகாதார பணிமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

எனினும், மாலை 06 மணியான நிலையில் 6,600 லீற்றர் பெற்றோலும் முடிவடைந்த நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது. பல சுகாதார உத்தியோகத்தர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் ஆயுர்வேத வைத்தியர்கள், ஊழியர்கள் எவருக்கும் பெற்றோல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் நீண்ட நேரம் காத்திருந்தும் சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மேற்படி ஆயுர்வேத வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், ஊழியர்கள் எரிபொருள் வழங்கலில் புறக்கணிக்கப்பட்ட சம்பவத்துக்கு அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கட்டுமையான கண்டனம் வெளியிட்டுள்ளார்.










# கரைவலை மீன்பிடி

திருகோணமலை நகர கடற்கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் கரைவலையை பயன்படுத்தி, மீன்பிடி நடவடிக்கைகளில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றமையை காண முடிகின்றது. மண்ணெண்ணெய் நெருக்கடி காரணமாக தாம் கரைவலை மூலம் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.
இதன்மூலம் அயலை, சூறை ஆகிய மீன்கள் அதிகமாக பிடிபடுவதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.
ஒரு கிலோ கிராம் மீன் 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம்: ஹஸ்பர்)

# மின் சைக்கிளும் களத்துக்கு வந்தது



■ பாறுக் ஷிஹான்

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பிரச்சினை காணப்படுவதால் பொதுமக்கள் மாற்றுயுக்தியுடைய பல உபகரணங்களை அன்றாட செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் உள்ளிட்ட பகுதிகளில் மின்சேமிப்பு சைக்கிளை தற்போது பொதுமக்கள் பரவலாகப் பாவிப்பதை அவதானிக்க முடிகின்றது.

மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் குறித்த சைக்கிள், இலங்கை நாணய மதிப்பில் இரண்டு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக உள்ளதாக தெரியவருகிறது. எட்டு மணித்தியாலங்கள் மின்சாரத்தின் உதவியுடன் சார்ஜ் செய்யப்படும் இந்தச் சைக்கிள், மின்சார மின்கலத்தின் சக்தியுடன் விரைவாக பயணத்தை மேற்கொள்கின்றது.

எரிபொருள் இல்லாமல் இலகுவாக ஒருவர் இந்தச் சைக்கிளை பயன்படுத்தி, தமது வேலைகளை விரைவாக பூர்த்தி செய்யமுடிவதுடன், இரவில் பயணம் செய்வதற்குரிய சக்தி வாய்ந்த மின்குமிழும் இச்சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும், வீதியில் பயணிக்கின்ற போது எதிரே வருகின்ற வாகனங்களுக்கு சமிஞ்சை வழங்கக்கூடிய வசதியையும் கொண்டுள்ளது.

ஒரே தடவையில் 100 கிலோ மீற்றர் தூரத்துக்கு சென்று இலக்கை அடைந்து திரும்ப முடிகின்றதுடன், இதில் அமர்ந்து செல்ல பிரத்தியேக தயாரிப்பு ஆசனம் பொருத்துவதற்குரிய ஏற்பாடும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உள்ளூர் போக்குவரத்து

# பொறிமுறை ஆராய்வு

■ எஃப்.முபாரக்

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் எதிர்நோக்குகின்ற போக்குவரத்து பிரச்சினையை ஓரளவு சீர்செய்யும் நோக்கத்தில், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் தலைமையில் நேற்று முன்தினம் (02) மாலை கலந்துரையாடல் இடம்பெற்றது.நோயாளர்களை பார்வையிடுவதற்காக வருகின்ற பொதுமக்களுக்கு பஸ் சேவையை ஒழுங்குபடுத்தல், உரிய நேரத்துக்கு பாடசாலை மாணவர்களுக்கு பஸ் சேவையை வழங்குதல், பஸ் நிறுத்துமிடத்தில் ஏற்படும் இடர்பாடுகளை போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியைக் கொண்டு சீர் செய்தல், இலங்கை துறைமுகத்துவாரத்தில் இருந்து வருகின்ற பஸ்களை தோப்பூர் பிரதேசத்தின் ஊடாக வருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன. இந்தக் கலந்துரையாடலில், வலயக் கல்விப் பணிப்பாளர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மூதூர் போக்குவரத்துச் சபையின் முகாமையாளர், தனியார் பஸ் போக்குவரத்துச் சேவையின் நேரக்காப்பாளர்கள் கலந்துகொண்டனர்.





### கோதுமை மாவை ஏற்றி வந்த

# லொறி விபத்து

■ எச்.எம்.எம்.பர்ஸான்

கோதுமை மாவை ஏற்றிவந்த லொறி, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் நேற்று (03) அதிகாலை விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி கோதுமை மாவை ஏற்றிச் செல்லும் போது, சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு விபத்துக்குள்ளான லொறியில் பயணம் செய்த சாரதியும் நடத்துநரும் காயங்களின்றித் தப்பியுள்ளனர். இந்த விபத்து தொடர்பானமேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



### இ.போ.ச பஸ்

# நடத்துநரிடம் கொள்ளை

■ பைஷல் இஸ்மாயில்

யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து பஸ்ஸில் பயணித்த மூவர், பஸ் நடத்துநரைத் தள்ளி விழுத்தி, அவரிடமிருந்த 59,177 ரூபாய் பணத்தைக் கொள்ளையிட்ட சம்பவம், கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் நேற்று முன்தினம் (02) இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி மூவரும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்து, உமையாள்புரம் பகுதியில் இறங்கியுள்ளனர். அவர்கள் இறங்குவதற்காக நடத்துநர் இடங்கொடுக்க முற்பட்டபோதே, அவரைத் தள்ளிவிழுத்தி அவரிடமிருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளனர். மேலும், அவர்கள் இறங்கிய இடத்தில் வேறு சிலரும் காத்திருந்ததாக குறித்த பஸ்ஸில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



### கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட

# பொதி மாயம்; முறைப்பாடு பதிவு

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின் பொதிகள் சேவைகள் ஊடாக, அனுப்பப்பட்ட பொதியை தொலைத்து விட்டு, யாழ்ப்பாணத்தில் பொதியை பெற இருந்தவரை தகாத வார்த்தைகளால் பேசி, மிரட்டியமை தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளுக்கான 6,000 ரூபாய் பெறுமதியான உதிரிப்பாகம் ஒன்றை கொழும்பில் உள்ளவர்களுடன் தொடர்புகொண்டு கொள்வனவு செய்து, அதனை யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸின் பொதிகள் சேவைகள் ஊடாக குறித்த கட்டணத்தை செலுத்தி யாழ்ப்பாணத்துக்கு வரவைத்துள்ளார்.


எனினும், யாழ்ப்பாணத்தில் குறித்த பொதியை பெற சென்ற போது, பொதி தொலைந்து விட்டது என பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததுடன், பொதியைத் தொலைத்தமையால் பொதியில் இருந்த பொருளின் விலையை தருமாறு கேட்ட போது தகாத வார்த்தைகளால் பேசி அநாகரிகமான முறையில் நடந்து கொண்டுள்ளனர்.

இது தொடர்பில், பாதிக்கப்பட்டவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

### பதுக்கி வைக்கப்பட்டிருந்த

# எரிபொருள் பரல்கள் மீட்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி நகரை அண்மித்த நவபுரம் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 31 பரல்களில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகருக்குள் சட்டத்துக்கு முரணான வகையில் எரிபொருட்களை பதுக்கி வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவல்களின் அடிப்படையில் நேற்று (03) திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.இதன்போது, குறித்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 31 பரல்களில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டன. இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்ததாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

### சிறுவனிடமிருந்து

# சூட்சுமமாக சைக்கிள் திருட்டு

■ பாஸ்கரன்



முல்லைத்தீவு, திருமுறிகண்டி பகுதியில் சிறுவனை வழிமறித்த நபர், அவரது சைக்கிளை வாங்கிச் சென்று களவாடியுள்ளமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒருவர் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் பெற்றோல் இல்லாது நின்று விட்டதாகவும் அருகிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்துக்குச் சென்று பெற்றோல் வாங்கி வருவதாகவும் தெரிவித்து, சிறுவனின் சைக்கிளை வாங்கிச் சென்றுள்ளார்.

சென்றவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததால் 3 மணி நேரத்துக்கு மேல் வீதியில் காத்திருந்த சிறுவன், பெற்றோருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

பின்னர் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளது.

# துஞ்சம் கோரிய தாய் மரணம்

■ லெம்பர்ட்



இலங்கையிலிருந்து ஜூன் மாதம் படகு மூலம் தனுஷ்கோடி சென்ற தம்பதியரில் பரமேஸ்வரி என்ற வயோதிப தாய் உயிரிழந்துள்ளார்.

குறித்த இருவரும் கடற்கரையில் மயக்கமுற்றிருந்த நிலையில் மீட்கப்பட்டு, இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வந்தன.

எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (02) இரவு பரமேஸ்வரி உயிரிழந்துள்ளார்.

மன்னார், முருங்கன் பிட்டி பகுதியை சேர்ந்த பரமேஸ்வரி மற்றும் சிவன் ஆகிய குறித்த வயோதிப தம்பதி, கடந்த மாதம் 27ஆம் திகதி இலங்கையிலிருந்து படகு மூலம் தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையில் 85க்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வெளிநாட்டு பிரஜையைத் தாக்கிய நபர் விடுதலை:

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக முறைப்பாடு

■ செந்தூரன் பிரதீபன்

வயாவிளான் பகுதியில் காணி பிரச்சினை ஒன்று தொடர்பில் வெளிநாட்டில் இருந்து வந்த பிரஜை மீது தாக்குதல் மேற்கொண்ட நபர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்றத்தில் முற்படுத்தாமல் மத்திய சபை ஊடாக சமாதானமாக செல்லுமாறு பொலிஸார் கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டு பிரஜையான முத்துதம்பி தேவராஜன், மனித உரிமை ஆணைக்குழுவில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதுடன், இது தொடர்பில் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வந்த நபர், தனது காணிக்குள் வேலை செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த குட்டியப்புலம் பகுதியை சேர்ந்த நபர் இது தன்னுடைய காணி எனக் கூறி, வெளிநாட்டு பிரஜையை தாக்கியுள்ளார். இதில் கண்ணில் பாதிப்பு ஏற்பட்ட வெளிநாட்டு பிரஜை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்று நாள்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்.



இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டுள்ளமையை அடுத்து, பாதிக்கப்பட்ட நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்.

# டிக்கோயா ரோட்டரி கழகத்தின் நிதியுதவி



ஹட்டனில் வசிக்கின்ற கிருஸ்ணசாமி சர்தாசன், தன்னுடைய பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்காக டிக்கோயா ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் 60,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இந்தத் தொகையானது மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை இலண்டனில் வசிக்கின்ற யோகேஸ்வரன், டிக்கோயா ரோட்டரி கழகத்தின் உறுப்பினர் சிதம்பரம்பிள்ளை சப்பானி ஆகிய இருவரும் இணைந்து டிக்கோயா ரோட்டரி கழகத்துக்கு வழங்குகின்றனர்.

முதல் இரண்டு மாதங்களுக்கான 10,000 ரூபாய்க்கான காசோலையை டிக்கோயா ரோட்டரி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு, உறுப்பினர்களான டொக்டர் சந்திரராஜன் சோமசுந்தரம், ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் சத்தியமூர்த்தி ஆகியோர் இணைந்து அந்த மாணவனின் தாயாரிடம் கையளித்தனர்.

(டி. ஷங்கீதன்)




## சுவசெரியவும் வானும் மோதி விபத்து

■ ரஞ்சித் ராஜபக்ஷ



சுசவெரிய அம்பியூலன்ஸ் வண்டியும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நாவலப்பிட்டி- கினிகத்தேனை வீதியின் மீபிட்டிய பகுதியில் நேற்று (3) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை பகுதியிலிருந்து நோயாளி ஒருவரை நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு ஏற்றிச்சென்ற சுவசெரிய அம்பியூலன்ஸ் வண்டி, மீண்டும் கினிகத்தேனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போதே, கினிகத்தேனையிலிருந்து நாவலப்பிட்டி நோக்கி சென்று கொண்டிருந்த வானுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

எனினும், இதன்போது எவருக்கும் காயங்கள் ஏற்படாத போதிலும் இரண்டு வாகனங்களும் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இதேவேளை, வானின் சாரதிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை எனத் தெரிவித்துள்ள பொலிஸார், வான் சாரதியின் கவனயீனமே இந்த விபத்துக்கு காரணம் எனத் தெரிவித்துள்ளனர். வானின் சாரதி நாவலப்பிட்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மலையகத்தில் கடும் மழை

# பல வீடுகள் நீரில் மூழ்கின

## வீதிகளில் ஆங்காங்கே மண் மேடுகள் சரிந்தன

■ மலையக நிருபர்கள்

மலையக பிரதேசங்களில் நேற்று (03) அதிகாலை வீசிய கடுங்காற்று, இடைவிடாது பெய்து வரும் கடும் மழை காரணமாக, பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்குடன் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

கொட்டகலை, கொமர்சல் சமாதானபுர வீடமைப்புத் திட்டத்தில் 5 வீடுகள் நீரில் மூழ்கியதால், 5 வீடுகளைச் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் டெவன் பகுதியிலும் வீடொன்று நீரில் மூழ்கியுள்ளது.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹைட்ரி தோட்டத்தின் ஊடாக கலபொட ஆற்றுக்கு நீரைக் கொண்டுச் செல்லும் சிறிய ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, குறித்த தோட்டத்தைச் சேர்ந்த பல வீடுகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட வீடுகளில் வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், காசல்றீ மற்றும் மவுசாக்கலை நீர்தேக்கங்களுக்கு நீரேந்தும் பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையால், கெனியோன் நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று (3) அதிகாலை தொடக்கம் காலை 8 மணிவரை திறந்து விடப்பட்டிருந்தன.

ஹட்டன்- நுவரெலியா, ஹட்டன்- கொழும்பு பிரதான வீதிகளின் பல இடங்களில் மண்மேடுகள் சரிந்து விழுகின்றமையால் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நோட்டன்- தியகல பிரதான வீதியில் 05 ஆம் கட்டைக்கு அருகாமையில் மண்சரிவு ஏற்பட்டதால் குறித்த வீதியினுடான போக்குவரத்து பல மணித்தியாலங்கள் நேற்று (03) தடைப்பட்டிருந்தன. அதனை தொடர்ந்து நோட்டன் பொலிஸாரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் இணைந்து வீதியில் வீழ்ந்த பாறாங்கற்கள், மண் என்பவற்றை அகற்றியதன் பின்னர், அவ்வீதியூடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

அதேவேளையில், பாதிக்கப்பட்டவர்களை இப்பகுதி கிராமசேவகர் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் அம்பகமுவ பிரதேச செயலகத்தின் கவனத்துக்கும் மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டுச் சென்றுள்ளார்.

பிரதான வீதிகளில் மூடுபனி காணப்பட்டதால் வாகன சாரதிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. மேலும், பனி மூட்டங்கள் நிலவுதால் வாகன சாரதிகள் வாகனங்களை மிக அவதானத்துடன் செலுத்த வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## கணவனை மண்வெட்டியால் கொத்தி

## கொலை செய்த மனைவியும் மகனும் கைது

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை, கஹட்டருப்ப பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதான நபரை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த பெண்ணும் அவரது மகனும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த நபரின் 33 வயதான மனைவியும் அவரது 17 வயதான மகனுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சந்தேகநபர்களின் வீட்டிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள காட்டிலிருந்து ஜூன் மாதம் 16ஆம் திகதி, சடலமொன்று மீட்கப்பட்டிருந்ததுடன், அது மிருகங்களால் கடித்து சேதமாக்கப்பட்டிருந்தது.

இந்தச் சடலம் தொடர்பில் பதுளை நீதிமன்ற அறிக்கையின் பின்னர், பதுளை நீதவான் சுஜித் த சில்வா, இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களை கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த நிலையிலேயே சந்தேகநபர்கள் கடந்த முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இதற்கமைய, தனது மகனின் காதலை தந்தை எதிர்த்ததுடன் மகனைத் துன்புறுத்தியதாகவும் கணவன் தூங்கிக் கொண்டிருக்கும் போது மண்வெட்டியால் கொத்தி கொலை செய்ததாகவும் மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 31ஆம் திகதி இரவு இந்தக் கொலையை செய்ததுடன், மறுநாள் இரவு மகனுடன் சேர்ந்து சடலத்தை காட்டில் வீசியதாகவும் அன்றைய தினமே பொலிஸ் நிலையத்தில் தனது கணவனைக் காணவில்லை என முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## விழிப்புணர்வு கூட்டம்



'நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்' எனும் தொனிப்பொருளின் கீழ், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியால் மக்கள் விழிப்புணர்வு பொதுக்கூட்டம், கந்தப்பளை நகரில் நேற்று முன்தினம் (02) நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், கட்சியின் தேசிய அமைப்பாளர் வை. மகேந்திரன், கட்சியின் மலையக பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன், முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்வி செயலாளர் புபுது ஜயக்கொட உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஆ. ரமேஸ்)

## கடற்படை சீருடையில் சென்று பெற்றோல் வாங்கியவருக்கு பிணை

■ எஸ்.யோகா

கடற்படை சீருடையைப் பயன்படுத்தி, 45 லீற்றர் பெற்றோலைப் பெற்றுகொண்ட முன்னாள் கடற்படை வீரரை கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதவான் நாமல் பெரேரா, ஒரு இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் விடுவித்துள்ளார்.

கம்பளை, அங்கம்மன பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படை வீரர், சில தினங்களுக்கு முன்னர் கம்பளை- கண்டி வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்துக்கு கடற்படை சீருடையுடன் வந்து, கடற்படைக்கு சொந்தமான படகுக்குத் தேவையென கூறி, கேன் ஒன்றில் 45 லீற்றர் பெற்றோலைப் பெற்றுகொண்டுள்ளதாக தெரிய வருகிறது

சந்தேகநபர், கடற்படை ஒழுக்க விதிமுறைகளை மீறி, தன் சொந்த தேவைக்காக சீருடையுடன் எரிபொருள் பெற்றுகொண்டமை தொடர்பாக, தலாத்து ஓயா கடற்படை முகாம் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, அவர் கம்பளை பொலிஸாருக்கு, தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்தே, சந்தேகநபரை பொலிஸார் கைது செய்து, கம்பளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் மரணம்

■ எஸ்.சதீஸ்



பொகவந்தலாவை மேல் பிரிவு தோட்டபகுதியில் உள்ள, வனப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற நான்கு பேர், குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏனைய மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த நால்வரும் விறகு சேகரிக்கச் சென்ற போது, மரத்தில் இருந்த குளவிக் கூட்டை பறவையொன்று மோதியமையால், குளவிகள் கலைந்து தாக்கியுள்ளன.

இதனையடுத்து நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொகவந்தலாவை கீழ் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிக்கன் பத்மநாதன் (வயது 50) என்பவரே உயரிழதுள்ளார்.

## மனைவி வெளிநாடு செல்வதைத் தடுக்குமாறு

### பிள்ளைகளின் தந்தை கோரிக்கை

■ அஜித்லால் சாந்தஉதய



பொருளாதார நெருக்கடி என தெரிவித்து, 25 வயதான தனது மனைவியை, நபர் ஒருவர் வெளிநாடு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதைத் தடுக்குமாறு தெரிவித்து கணவன், இரத்தினபுரி பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி, துரெக்கந்த பிரதேசத்தைச் சேர்ந்த சுப்ரமணியம் ரவீந்திரன் என்ற நபரே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். தனக்கு முறையே 11, 06, 03, 02 வயதுகளுடைய நான்கு பிள்ளைகள் உள்ளனர் என்றும் அதிலொன்று பெண் குழந்தை விசேட தேவையுடையவர் என்றும் தெரிவித்துள்ளார்.

தானும் மனைவியும் தேயிலைத் தோட்டமொன்றில் தொழில் செய்து வரும் நிலையில், தனது மனைவியை நபரொருவர் வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தற்போது அதன் நிமித்தம் தன்னுடைய மனைவி, வீட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்றும் கணவன் தெரிவித்துள்ளார்.

தாயைத் தேடி, பிள்ளைகள் அழுவதால் மனைவியை வெளிநாடு செல்வதைத் தடுக்குமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## தம்புளை பிரதேச ஊடகவியலாளர்களுக்கு

## எரிபொருள் வரிசையில் முன்னுரிமை

■ காஞ்சன குமார

தம்புள்ளை- அநுராதபுரம் வீதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், ஊடகவியலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், நேற்று முன்தினத்திலிருந்து (02) இருந்து எரிபொருள் வழங்கப்பட்டது.

பிரதேச ஊடகவியலாளர்களை வரிசையில் காத்திருக்க விடாமல், அவர்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தமது எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு கிடைக்கும் எரிபொருளை, பொதுமக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்துள்ள குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் உரிமையாளர், தம்புள்ளை பிரதேசத்தில் அளப்பரிய சேவையாற்றும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

அதற்கமைய காருக்கு 5,000 ரூபாய்க்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு 2,000 ரூபாய்க்கும் ஓட்டோக்களுக்கு 3,000 ரூபாய்க்கும் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

அதேப்போல் குறித்த உரிமையாளர், தம்புள்ளை பிரதேச ஓட்டோ சாரதிகள் சங்கத்துக்காக 200 லீற்றர் பெற்றோலை ஒதுக்கி, அதனை அவர்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தார்.



# மாணவர்களின் எதிர்கால ஆயுதத்தைத் தீட்டி கூர்மைப்படுத்தவும்

மீண்டும் தலையைத் தூக்கி, கொஞ்சமாக முன்னகர்ந்து கொண்டிருந்த போது, இடிவிழுந்தாற்போல நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு துறையையும் சின்னாபின்னமாக்கிவிட்டது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், மீண்டெழுதல் என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கின்றது.

எனினும், நம்பிக்கையைத் தளரவிடாதவர்கள், 'முயற்சி செய்து பார்ப்போம்; என்றோ ஒரு நாளைக்கு வழமைக்குத் திரும்பும்' என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். இன்னும் சிலர், 'அவ்வளவுதான்' என, சோர்ந்து போகத்தொடங்கியுள்ளனர்.

ஆனால், மாணவர்களில் பெரும்பாலானவர்கள் கல்விதான் எதிர்காலத்துக்கு கைகொடுக்கும் எனும் தாரகமந்திரத்தைத் தன்னகத்தே கொண்டு, மும்முரமாகக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். கொரோனாவுக்குப் பின்னர், சுறுசுறுப்பாக மாணவர்கள் இயங்கினர். எனினும், நெருக்கடி காலகட்டத்தில், பாடசாலைகளுக்கு தொடர்ச்சியாக விடுமுறை வழங்கப்படுவதால், சோர்ந்து போவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகமாகும்.

மாணவர்களில் பெரும்பாலானவர்கள் நிகழ்நிலை கல்வியையும், பிரத்தியேக வகுப்புகளையுமே நம்பியிருக்கின்றனர். அவற்றிலிருந்து கற்றுக்கொண்டவையை வைத்தே, பரீட்சைக்குத் தயாராகின்றனர். ஆகையால், நிகழ்நிலை கல்வியை முறையாக முன்னெடுப்பதை பாடசாலை நிர்வாகம் உறுதிப்படுத்தவேண்டும்.

குறிப்பாக, மின்சாரம் தடைப்படாத நேரங்களில் நிகழ்நிலை கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கொரோனா காலத்தில் இந்த நிகழ்நிலை கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டாலும், இன்னும் பல பாடசாலைகளின் மாணவர்கள், அந்த முறைமையின் கீழ் உள்வாங்கப்படவில்லை என்பதுதான் கவலையளிக்கிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால், ஒவ்வொரு குடும்பமும் பல்வேறான நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. 'நமது காலம்தான் முடிந்துவிட்டது. பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகுமோ' என, பெற்றோர் பலரும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டும், தனியார் வகுப்புகளின் ஊடாக எவ்வளவுக்கு எவ்வளவு வழங்கமுடியுமோ அந்தளவுக்கு தனியார் வகுப்புகளின் ஆசிரியர்கள் வழங்கவேண்டும். அத்துடன், எவ்வளவு பெற்றுக்கொள்ள முடியுமோ, அவ்வளவையும் மாணவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டு, பாடவிதானங்களை நிறைவு செய்வது என்பது, ஒருசில பாடசாலைகளில் நுனிப்புல் மேய்வதாகவே அமைந்திருக்கும். ஆகையால், கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம், கற்பதே மாணவர்களுக்கு அழகு.

நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்கு பெற்றோர் உறுதுணையாக நின்று வழிகாட்டவேண்டும். ஆசிரியர்களும் தங்களால் முடிந்தளவுக்கு மாணவர்களை முன்னோக்கி இழுத்துச்செல்வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தைப் பற்றி பெற்றோர்கள் புலம்புவதைப் போல மாணவர்களும் புலம்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

முடியாது, இயலாது, முடிந்துவிட்டது உள்ளிட்ட நேர்மறையான எண்ணங்களையும் சிந்தனைகளையும் தூக்கியெறிந்துவிட்டு, காலங்கள் மாறுமென்ற நம்பிக்கையில் முன்னோக்கி நகரவேண்டும். அதற்காக மாணவர்களிடத்தில் இருக்கும் கல்வி எனும் ஆயுதத்தை கூர்மையாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே எமது அறிவுரையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி


தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொரு வார்த்தைக்கும் உயிர் உண்டு; அர்த்தமும் உண்டு. நல்ல வார்த்தைகளைச் சொன்னால், அவற்றுக்குள் கருத்துடன் உண்மையும் உண்டு. இதுவே உயிர்போல இருக்கும்.

ஒருவரை மனமாற வாழ்த்தினால், உச்சி குளிரும் என்பார்கள். சந்தோசம் மிளிரும். கேட்டதுமே ஆன்மாவுக்கு சக்தியூட்டும்.

ஆனால், ஒருவரை வாய்க்கு வந்தபடி திட்டினால், உள்ளம் சோர்ந்துவிடும். உயிர் துடிப்பதுபோலிருக்கும்.

எனவே, நல்ல வார்த்தைகளைப் பேசி, நல்லபடி வாழுங்கள். பிறரை மகிழ்வூட்டுவதே வாழ்க்கையின் அர்த்தமாகிவிடுகின்றது. பேசும்போது யோசிக்க வேண்டும். மனதுக்கும் வார்த்தைகளுக்கும் சம்பந்தம் இல்லாமல் பேசக்கூடாது.

'சுடு' சொல் என்பது நெருப்புமழையை விடக் கொடுமையானது. எவருடைய மனத்தையும் நோகடித்தால், அதன் எதிர்மறைத் தாக்கம் பாரிய விளைவுகளைத் தரும்.

நல்ல வார்த்தைக்குள் 'அறம்' இருக்கின்றது. அறத்தைப் போற்றி நடந்தால், நினைத்த காரியங்கள் சுலபமாகவும் சிறப்பாகவும் நடந்தேறும். இனிய வார்த்தைகள் நறுமணம் கமழ்பவை!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்




என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


# நோயைக் குணப்படுத்துவதா? அறிகுறியை மறைப்பதா?

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகத்தர் குழாமொன்று ஜூன் 20 முதல் 30 வரை, பத்து நாள்கள், இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு, இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் இலங்கைக்கான விரிவான பொருளாதார சீர்திருத்த திட்டம் ஆகியன பற்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமரும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, அரசாங்க மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள், சர்வதேச நாணய நிதியத்தின் அபிவிருத்தி பங்காளிகள் ஆகியோரைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டுத் திரும்பி இருக்கிறார்கள்.

இந்த விஜயத்தைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில், 'சர்வதேச நாணய நிதிய குழு (IMF) விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) மூலம் ஆதரிக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து, அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தியது. குறித்த கலந்துரையாடல்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும், விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) தொடர்பாக, உத்தியோகத்தர்கள் அளவிலான உடன்பாட்டை எட்டுவதற்கான கலந்துரையாடல் தொடரும்' என்று குறிப்பிட்டிருந்தது.

'கலந்துரையாடல் தொடரும்' என்ற குறிப்பு, இந்த விஜயத்தை தொடர்ந்து இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையிலிருந்த இலங்கையர்களைக் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. இந்தக் கவலைக்கு முக்கிய காரணம், சர்வதேச நாணய நிதியத்தினுடனான ஒப்பந்தமொன்று இன்றி, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் பெருமளவு உதவி எதையும் இலங்கைக்கு வழங்கத் தயாராக இல்லை என்ற நிலைமையாகும்.

ஆகவே, பொருளாதார ரீதியில் இலங்கை மீண்டெழுவதற்கு, சர்வதேச நாணய நிதியத்தினுடனான ஒப்பந்தம், இன்றியமையாததொரு தேவையாக உருவெடுத்திருக்கிறது.

இது பற்றி இன்னும் பேசுவதற்கு முன்பதாக, இலங்கையர்கள் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்வது அவசியமாகும். சர்வதேச நாணய நிதியம் என்பது, தர்ம ஸ்தாபனம் அல்ல. அதன் நோக்கம் தர்மம் செய்வதல்ல; அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையுள்ள நாடுகளுக்கு, கடன் வசதி வழங்குவதன் மூலம், கடன் பெறும் நாடுகளுக்கு ஆலோசனை, தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம், அந்நாடுகள் நிதி நெருக்கடி நிலையைச் சமாளிக்கவும், அதிலிருந்து மீளவும் உதவி செய்வதாகும்.

ஆனால், அது வழங்குவது கடன். அந்தக் கடன் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். ஆகவே, கடனைத் திருப்பிச் செலுத்தத் தக்கதாகவும், பொருளாதார நிலையை மீட்டெடுக்கக் கூடியதாகவுமான குறுங்கால, நீண்டகாலக் கொள்கைகளும் திட்டங்களும் இல்லாத அரசொன்றுக்கு சர்வதேச நாணய நிதியம், தர்மம் செய்வதுபோல கடன்வழங்காது. அதற்காகத்தான், அது நீண்ட கலந்துரையாடல்களின் மூலம், பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பிலான பல விடயங்களை உள்ளடக்கிய விரிவான ஒப்பந்தமொன்றை மேற்கொள்கிறது.

அந்தத் திட்டத்தின்படி அரசாங்கம் நடக்கும் போது மட்டும்தான், அது தொடர்ந்து கடனுதவியை அளிக்கிறது. ஒரு வகையில், இது இலங்கை போன்ற, முறையான பொருளாதார திட்டம் எதுவுமில்லாத, ஆட்சியிலுள்ளவர்கள் தங்கள் விருப்பத்துக்கு ஏற்றவாறு பொருளாதாரம், நாணயக் கொள்கை என்பவற்றை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும் 'வாழைப்பழக் குடியரசு'களுக்கு நல்ல விடயம்தான். ஆனால், இதில் குறைகள் இல்லாமலும் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் என்பதும், இதுவரை இலங்கை வெளிநாடுகளிடம், வெளிநபர்களிடம் வாங்கிய கடன்கள் எல்லாமே, மீளச் செலுத்தப்பட வேண்டும். அப்படியானால், அரச வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும்; அரச செலவினம் குறைய வேண்டும்.

அரச வருமானம் அதிகரிப்பதற்கு, வரி விதிப்பு அதிகரிக்கப்பட வேண்டும். இந்த வரிச் சுமை மக்களால்தான் சுமக்கப்படப் போகிறது. அதுபோலவே அரச செலவு குறையும் போது, அரசாங்கத்தின் பொதுநலச் செயற்றிட்டங்களும் குறையலாம். ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தினுடனான ஒப்பந்தத்தின்படியான, பொருளாதார மறுசீரமைப்பு ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் போது, அது இலகுவாக இருக்கப்போவதில்லை. இது ஒரு கடினமான பாதையாக இருக்கும்.

ஒரு பெருநோயிலிருந்து மீள்வதற்கான சிகிச்சை இது. சிகிச்சை இலகுவானதாக இருக்கப்போவதில்லை. அது கடுமையானது. ஆனால், கட்டுப்பாட்டுடன், பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் போது, இந்த நோயிலிருந்து நாடு ஒரு பத்து வருடங்களில் மீளமுடியும்.

இந்தக் கடினமான பொருளாதார மீட்புச் சிகிச்சையை முன்னெடுக்கும் எந்த அரசாங்கமும், மக்களிடம் பிரபல்யம் பெறப்போவதில்லை. அவை கெட்டபெயரையே பெறும். கசப்பான மருந்தை, வலிந்தூட்டும் கடுமையான வைத்தியரை வெறுக்கும் குழந்தையைப் போல, மக்கள் இந்தத் திட்டங்களை அமல்படுத்தும் அரசாங்கத்தை வெறுக்கத் தொடங்குவர்.

இது சந்தர்ப்பவாத சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும். "பத்தே நாளில் நாம் குணப்படுத்துகிறோம்" என்று வாய்ஜாலம் பேசுவோர்பால், மக்கள் ஈர்ப்புக்கொள்வதற்கான வாய்ப்புகள் பல. ஆனால், அவர்களால் குறுங்காலத்தில் இனிப்புகளை வழங்கமுடியுமேயன்றி, நோயைக் குணப்படுத்த முடியாது.

> **"ஏரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றின் தட்டுப்பாடு நோய் அல்ல; அவை நோயின் அறிகுறிகள்தான். இலங்கையில் பொருளாதாரம் நலமாக இருந்தால், இலங்கைக்கு அந்நியச் செலாவணி கையிருப்பு தேவையானளவு இருக்குமானால், எரிபொருள், எரிவாயு வரிசைகள் மறைந்து போய்விடும்**

இதுபோன்று இனிப்பு வழங்குனர்களால்தான், இலங்கை இந்த நிலைக்கே வந்தது. முறையான பொருளாதாரக் கொள்கை, வளர்ச்சித் திட்டம் என எதுவுமில்லாமல், பொருளாதாரத்துக்குப் பயன்தராத திட்டங்களை, பெரும் கடனெடுத்து நடைமுறைப்படுத்தி, கடனடைக்கும் வழிகளைப் பற்றியெல்லாம் சிந்திக்காத, தூரநோக்கற்ற, மக்களுக்கு 'இனிப்பு' வழங்கி அதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டவர்களால், இலங்கைக்கு வந்த நிலை இது. ஆகவேதான், கசப்பான வைத்தியத்தை வழங்கும் எந்த அரசாங்கமும், அதற்கான தேவை பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு வழங்குவது இன்றியமையாத ஒன்றாகும்.

வறுமையை ஒழிக்க, அரசாங்கம் பணத்தை அச்சிட்டு மக்களுக்கு வழங்கவேண்டும் என்று நினைக்கிறளவில் பொருளாதார அறிவுடையவர்கள் பலர் வாழும் நாட்டில், பொருளாதாரம், பொருளியல் பற்றிய விழிப்புணர்வை அரசாங்கம் வழங்கத் தவறினால், கசப்பு மருந்து வழங்கும் அரசாங்கத்தை, மக்கள் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, இனிப்பு வழங்குவோரை ஆட்சிக்குக் கொண்டுவந்துவிடுவர்.

மறுபுறத்தில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை விரைவில் எட்டுவதில் அக்கறை காட்டுவதை விட்டுவிட்டு கோட்டாபய ராஜபக்ஷ, ரஷ்யாவிடம் எண்ணெய் கடன் வாங்குவது, மத்திய கிழக்கு நாடுகளிடம் எண்ணெய் கடன் வாங்குவது, அவ்வப்போது அத்தியாவசியத் தேவைக்குக் கடன் வாங்குவது என, எஞ்சியிருக்கும் தனது இரண்டரை வருட காலத்தை ஓட்டிவிடலாம் என யோசிப்பது, இலங்கையை மிகப் பெரிய மீளமுடியாத பள்ளத்துக்குள் தள்ளிவிடும்.

எரிபொருள், எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றின் தட்டுப்பாடு நோய் அல்ல; அவை நோயின் அறிகுறிகள்தான். இலங்கையில் பொருளாதாரம் நலமாக இருந்தால், இலங்கைக்கு அந்நியச் செலாவணி கையிருப்பு தேவையானளவு இருக்குமானால், எரிபொருள், எரிவாயு வரிசைகள் மறைந்து போய்விடும்.

ஆகவே, உலகின் அநேக நாடுகள், குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான பங்களிப்பு நாடுகள், இன்று பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள ரஷ்யாவுடன், இலங்கை புதியதொரு பொருளாதார உறவை உருவாக்குவது என்பது, எவ்வளவு தூரம் புத்திசாலித்தனமானது என்பதை கோட்டாபய சிந்திக்க வேண்டும்.

நோயின் அறிகுறியைத் தீர்க்க வைத்தியம் தேடி, நோயைத் தீர்க்கும் வைத்தியத்தை தொலைத்துவிடக்கூடாது. அதுபோலவே, கோட்டாபய பதவி விலகினால்த்தான், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட, சர்வதேச நாடுகளின் உதவிகள் கிடைக்குமென்றால், கோட்டா, 'கோ ஹோம் கோட்டா' என்ற மக்களின் குரலை ஏற்று, பதவி விலகுவதுதான் இலங்கைக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

மாறாக, தனது எஞ்சியிருக்கும் இரண்டரை வருடகால பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கோட்டா, இலங்கையின் எதிர்காலத்தை பகடையாக்குவது நியாயமல்ல. கோட்டாவால், இலங்கையின் நோய்க்கு இரண்டரை வருடங்களில் வைத்தியம் செய்ய முடியாது. அவராலோ, ஞானாக்காவாலோ அது முடியாது.

அதற்கு முயற்சிப்பது என்பது, கோவிட்-19 பெருந்தொற்றுக்கு 'தம்மிக்க பாணி'யால் தீர்வுகாண முயன்றதற்குச் சமனானதாக அமையும். ஆகவே, நோய் தீரும் வைத்தியத்தைப் பெறுவதற்கு கோட்டா தடைக்கல்லாக நிற்பதை விட, விலகி வழிவிடுவதே அவர் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் ஆற்றக்கூடிய ஒரே நல்ல சேவையாக அமையும்.

## கடிதங்கள்

### தோணாவால் அச்சுறுத்தல்

காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள காரைதீவு, மாளிகைக்காடு பிரதேசத்தை இடையறுத்து ஓடிக்கொண்டிருக்கும் தோணாவில், குப்பைகள், விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்டும் சல்பீனியாக்கள் நிறைந்த நீரோடையாகவும் பலமாதங்களாக காட்சியளிக்கிறது. இதனால் சுகாதார சீர்கேடுகளை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நீரோடையை அண்டியதாக, காரைதீவில் ஒரு வாசிகசாலையும் மாளிகைக்காட்டில் ஒரு வாசிகசாலையுமாக இரு வாசிகசாலைகள், பாலர் பாடசாலை, பாடசாலை, பொதுமக்கள் குடியிருப்புகள், வங்கி என்பன அமைந்துள்ளன.

இப்பிரதேசத்தில் இருந்து, அடிக்கடி துர்நாற்றம் வீசுவதாக மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமின்றி குப்பைகள், சல்பினியாக்களால் குறித்த நீர்நிலை அடைத்துக் காணப்படுவதால் நீர் வடிந்தோட முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

முறையற்ற திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் காரணமாக, நீர்நிலை ஓரங்களில் திண்மக்கழிவுகள், விலங்குகளின் பாகங்கள் வீசப்பட்டு காணப்படுகின்றன. இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் அதிகரித்துள்ளதுடன் நீர்நிலையை அண்டிய பிரதேசங்களில் கண்டல் தாவரங்களும் வளர்ந்துள்ளன.

இந்த நீர்நிலையை (தோணா) துப்புரவு செய்வதற்கான ஏற்பாடுகளை காரைதீவு பிரதேச சபை, பிரதேச செயலகம், நீர்ப்பாசன திணைக்களம் போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

நூருல் ஹுதா உமர்



## யூனியன் அஷ்யூரன்ஸ்ம் யூனியன் வங்கியும்

# பங்காண்மையை புதுப்பித்தன



யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் யூனியன் வங்கி ஆகியன, தமது ஏழு வருட கால பங்காண்மையை நீடித்துள்ளன.

இந்த உடன்படிக்கையில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் மற்றும் யூனியன் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரி இந்திரஜித் விக்கிரமசிங்க ஆகியோர் கையொப்பமிட்டிருந்தனர். இந்த நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே, யூனியன் வங்கியின் நுகர்வோர் வங்கியியல் பிரிவின் சிரேஷ்ட உப தலைவர் சாயா ஜயவர்தன, யூனியன் வங்கியின் நுகர்வோர் தீர்வுகள் மற்றும் மாற்று நாளிகைகள் உப தலைவர் மனிஷா பெர்னாண்டோ, யூனியன் அஷ்யூரன்ஸ் நாளிகைத் தலைமை அதிகாரி சாமர நதிசாந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் யூனியன் வங்கி ஆகியன கடந்த காலங்களில் பரஸ்பர அனுகூலமளிக்கும் பங்காண்மையை பேணியிருந்ததுடன், பாங்கசூரன்ஸ் வாடிக்கையாளர்களினூடாக பயன்களைப் பெற்றிருந்தன. 2016ஆம் ஆண்டில் இந்தப் பங்காண்மை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், 2018ஆம் ஆண்டு முதல் பிரத்தியேகமானதாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “இந்தப் பங்காண்மையை புதுப்பித்துள்ளமையானது இரு நிறுவனங்களுக்கும் வெற்றியளிக்கும் நகர்வாக அமைந்துள்ளது. வங்கியின் பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஆயுள் காப்புறுதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க எமக்கு ஏதுவாக அமைந்திருக்கும் என்பதுடன், வாடிக்கையாளர்களை மையப்படுத்திய ஒப்பற்ற அனுபவத்தை வழங்கக்கூடியதாகவும் அமைந்திருக்கும். யூனியன் அஷ்யூரன்ஸ் இந்தப் பங்காண்மையினூடாக, நாட்டினுள் பாங்கசூரன்ஸ் சேவைகளை மேலும் விஸ்தரிப்பு செய்வதற்கு உதவியாக அமைந்திருக்கும். இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுவூட்டுவதுடன், பாதுகாப்புக்கு காணப்படும் இடைவெளியை குறைப்பதாக அமைந்திருக்கும். சேவைச் சிறப்பு, புத்தாக்கம், டிஜிட்டல் சௌகரியம் ஆகியன பாங்கசூரன்ஸின் உள்ளக அம்சங்களாக அமைந்துள்ளன” என்றார்.

இந்தப் பங்காண்மை நீடிப்பு தொடர்பில் யூனியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி இந்திரஜித் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “பாங்கசூரன்ஸ் என்பது வேகமாக வளர்ந்து வருவதுடன், வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்த்து, மேம்படுத்தப்பட்ட நிதியியல் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும், நீண்ட கால பாதுகாப்பை இந்த நெருக்கடியான காலப்பகுதியில் வழங்குவதாக அமைந்திருக்கும்” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில், “யூனியன் வங்கியுடனான பங்காண்மை தொடர்ந்து உறுதியாக வளர்ச்சியடையும். இந்தக் கைகோர்ப்பினூடாக நாட்டின் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநராக திகழச் செய்துள்ளது. வங்கியியல் சேவைகளைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாக்கமான தீர்வுகளுடன் பாதுகாப்பு, முதலீட்டு நிபுணத்துவம், சிறந்த நிதியியல் ஆலோசனை என்பவற்றை வழங்குவோம்” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் - யூனியன் வங்கி பங்காண்மையினூடாக, இரு நிறுவனங்களின் பெறுமதி மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், நிலைபேறான வியாபார வளர்ச்சிக்கு வழிகோலுவதாக அமைந்துள்ளது. ஒரே கூரையின் கீழ், பரந்தளவு புத்தாக்கமான ஆயுள் காப்புறுதி தீர்வுகளை அணுகுவதற்கு வங்கியின் வாடிக்கையாளர் இருப்புக்கு வலுச் சேர்த்துள்ளதுடன், ஒரே கூரையின் கீழ் தமது வங்கித் தேவைகளை நிவர்த்தி செய்யும் தீர்வுகளையும் வழங்குகின்றது.

## SLT-MOBITEL இனால்

# ‘The Directory 2022’ அறிமுகம்



SLT-MOBITEL இன் முழு உரிமையாண்மையில் இயங்கும் SLT Digital Services (Pvt) Limited (SLT-DIGITAL) இனால் தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவை, ‘The Directory 2022’ எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையின் பிந்திய வெளியீடாக ‘The Directory 2022’ அமைந்திருப்பதுடன், நாட்டில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கான புதிய சாதனமாகவும் அமைந்துள்ளது. பாவனையாளர்களுக்கு நட்பான வழிகாட்டல்களினூடாக மேம்படுத்தப்பட்ட உள்ளம்சங்கள் மெருகேற்றப்பட்ட வர்த்தக நாமத்தில் வழங்கப்படுவதுடன், ஏற்கெனவே காணப்படும் மற்றும் எதிர்காலத்தில் இணையவுள்ள வாடிக்கையாளர்களுக்கு மற்றும் பதிவு செய்து கொண்டுள்ள விற்பனையாளர்களுக்கு மேலதிக பெறுமதியை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையின் ஒரே தேசிய வியாபார தொலைபேசி விவரக்கோவை எனும் வகையில், ‘The Directory’ இல் 10,000க்கும் அதிகமான தினசரி ஒன்லைன் தேடல்கள், 6,000 க்கும் அதிகமான வியாபார நிறுவனசார் நிரல்படுத்தல்கள், 170,000 க்கும் அதிகமான சிறுவிளம்பரங்கள், வகைப்படுத்தப்படாத உறுதி செய்யப்பட்ட இணைப்புகள், சேவை வகைகள் போன்றன அரச நிறுவனங்கள், வழிபாட்டுத்தலங்கள் அடங்கலாக, சகல பொருளாதார பிரிவுகளையும் உள்வாங்கி அமைந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசிக் கோவை 2022 இல், உறுதி செய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்கள் காணப்படுவதுடன், நாட்டு மக்கள், தமக்கு அவசியமான தேடல்களை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையிலும், தொழிற்றுறை பிரிவுகளான ஹாட்வெயார், நிர்மாணம், மின்சாதனங்கள், இலத்திரனியல் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த தேடல் அம்சங்களையும் கொண்டுள்ளது. Business Directory 2022இல் பதிவு செய்யப்பட்டிருப்பதனூடாக, Business to Business (B2B) மற்றும் MSMBs விற்பனையாளர்களுக்கு Search Engine Optimization (SEO) அணுகல் வசதியை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். சர்வதேச இணையத் தேடல் கட்டமைப்புகளில் தென்படக்கூடிய வகையில் இந்தத் தொலைபேசி விவரக்கோவை வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், கூகுள் தேடல்களில் நிறுவனங்கள் தென்படுவது அதிகமாக்கும் வகையில் அமைந்துள்ளன. மேலும், உயர்ந்த வகைப்படுத்தல், விளம்பர பகுதியினூடாக, வியாபாரங்களுக்கு அதிகளவு வாடிக்கையாளர்களை உள்வாங்குவதற்கான வலுவூட்டல் வழங்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட மற்றும் நிரல்படுத்தப்பட்ட வியாபாரங்களுக்கான மற்றுமொரு வலுச்சேர்க்கப்பட்ட உள்ளம்சமாக, அரசாங்க விலை மனுக் கோரல்களுக்கு விநியோகத்தர்களாக திகழ்வதற்கான தகைமை கிடைப்பது. அரசாங்க திறைசேரி சுற்றறிக்கைகளினூடாக பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்களுக்கு முன்னேற்றகரமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வியாபார தொலைபேசி கோவை விளம்பரம், டிஜிட்டல் தொலைபேசி கோவைத் தீர்வுகள், இணைய வடிவமைப்பு தீர்வுகள், நிகழ்வு முகாமைத்துவம், செயற்படுத்தல் மற்றும் வர்த்தக நாம சேவைகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொடர்பாடல் தீர்வுகள் போன்றவற்றில் SLT-DIGITAL நிபுணத்துவம் பெற்றுள்ளது. இதனூடாக, நாட்டின் நுண், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கு மிகவும் தெரிவுக்குரிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் தீர்வுகள் வழங்குநராகத் திகழ்வதற்கு பங்காற்றுகின்றது.

புதுடெல்லி

## அ.தி.மு.கவிடம் ஆதரவு கேட்ட ராகுல்காந்தி?

# ‘தவறான செய்தி’

### –காங்கிரஸ் அறிக்கை

இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் எதிர்வரும் 24ஆம் திகதி முடிவடைகிறது. புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) கூட்டணி சார்பில் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த பழங்குடி இன தலைவரும், ஜார்கண்ட் மாநிலத்தின் முன்னாள் ஆளுநருமான திரவுபதி முர்மு (வயது 64) போட்டியிடுகிறார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய நிதி மந்திரியான யஷ்வந்த் சின்கா (84) களம் இறக்கப்பட்டுள்ளார். இவ்விருவருக்கும் இடையில், நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் தாக்கல் முடிந்ததும், இவ்விருவரும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, எம்.பி, எம்.எல்.ஏக்களை சந்தித்து ஆதரவு திரட்டிவருகின்றனர்.



இந்தச் சூழலில் யஷ்வந்த் சின்காவுக்கு ஆதரவு அளிக்க கோரி அ.தி.மு.க தலைமையை ராகுல் காந்தி தொடர்பு கொண்டதாக தகவல் வெளியாகி இருந்தது.

அந்தத் தகவல் தவறானதென தெரிவித்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெயராம் ரமேஷ், அறிக்கையொன்றையும் விடுத்துள்ளார்.

‘ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த வேட்பாளரான யஸ்வந்த் சின்காவுக்கு ஆதரவு அளிக்குமாறு அ.தி.மு.க தலைமை எடப்பாடி பழனிசாமிக்கு ராகுல் காந்தி அழைப்பு விடுத்ததாக நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது.

‘இது முற்றிலும் போலியானதும் தவறானதுமாகும். அப்படி எந்தத் தொலைபேசி அழைப்பும் செய்யப்படவில்லை. தமிழகத்தில் காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி வலுவாக உள்ளது. கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்தி, பலவீனப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. இதனை தாங்கும் அளவுக்கு கூட்டணி உறுதியாக உள்ளது’.

பெங்களூரு

## தேவகவுடாவுக்கு பீஷ்மரின் சக்தி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் தேவேகவுடாவை பற்றி யாரோ கூறுவதால் அவருக்கு ஒன்றும் ஆகி விடாது. அவரிடம் பீஷ்மரின் சக்தி உள்ளது. இதனை நான் அருகில் இருந்து கவனித்து வருகிறேன் என்று முன்னாள் முதலமைச்சர் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் உள்ள ஜனதாதளம் (எஸ்) கட்சி அலுவலகத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“தேவேகவுடா பற்றி ராஜண்ணா இன்னொரு முறை மேடையில் பேசும்போது எச்சரிக்கையுடன் பேச வேண்டும். அடுத்த சட்டசபை தேர்தலில் ஜனதாதளம் (எஸ்) கட்சியை ஆட்சிக்கு கொண்டு வர தேவேகவுடா கடுமையாக உழைத்து வருகிறார். தேவேகவுடா சாதனையின் சிகரம் என்றும் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா

## திருடனுக்கு 35 தையல்கள் போடவைத்த வளர்ப்பு நாய்

கொல்கத்தாவில் வளர்ப்பு நாயொன்று, தனது உரிமையாளர் வீட்டில் கொள்ளையடிக்க வந்த திருடனை பிடிக்க உதவி, பலரின் பாராட்டை பெற்று வருகிறது.

கொல்கத்தாவில் ஜாது பாட்டச்சாரியா சாலையில் அம்மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி வசித்து வருகிறார். அந்தச் சாலையில் வசித்துவரும் மற்றுமொருவரின் வீட்டுக்குள் காலை 4 மணியளவில் திருடன் புகுந்துள்ளான்.

வீட்டுக்குள் திருடன் புகுந்ததை அறிந்ததும், வீட்டிலிருந்த பெண் சத்தம் போட்டுள்ளார். உடனே உஷாரான திருடன், கத்தியை நீட்டி மிரட்டினான். இதற்குள் வீட்டின் உரிமையாளரும் விழித்துகொண்டு, திருடனை பிடிக்க முயன்றுள்ளார். எனினும், திருடன் கத்தியால் வெட்டியுள்ளார்.

இதனிடையே, திருடன் காலை கௌவ்விப்பிடித்த வளர்ப்பு நாய், வீட்டின் நபர்கள் சுதாரித்து தாக்கும் வரை விடாமல், திருடனை மடக்கி வைத்திருந்தது. நாயின் பிடியில் சிக்கிக் கொண்ட திருடனை, வீட்டில் இருந்தவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

திருடனை நாய் கடித்ததில் அவனது கழுத்து, தோள், கால் ஆகியவற்றில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. 35 தையல்களும் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில், திருடனை விசாரித்ததில் அவர் அதே பகுதியில் மரக்கறி விற்பனை செய்பவர் என்றும், திருடுவதற்கான திட்டத்தை வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்தான் தீட்டி, இந்தத் திருடனை அங்கு அனுப்பியுள்ளார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னை

## ஓ.பி.எஸ் ஐ நீக்குவதற்கு இ.பி.எஸ் தரப்பு திட்டம்



ஒற்றைத் தலைமைக்கு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதால் ஓ.பன்னீர் செல்வத்தை (ஓ.பி. எஸ்ஸை), 11 ஆம் திகதி நடைபெறும் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பொதுக்குழுவில் கட்சியை விட்டு நீக்க, எட்டப்பாடி பழனிசாமி (இ.பி. எஸ்.) தரப்பு திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் ஜூன் 14 ஆம் திகதி முதல் அனல் பறந்து வருகிறது. ஜூன் 23ஆம் திகதி நடைபெற்ற பொதுக்குழுவில் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட 23 தீர்மானங்களைத் தவிர வேறு எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்தக் கூட்டத்தில் 23 தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன.

அதேநேரம், கட்சி அவைத் தலைவராக தமிழ்மகன் உசேனை தேர்ந்தெடுக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அவைத் தலைவராக அவர் பொறுப்பேற்றுக் கொண்டார். ஜூலை 11 ஆம் திகதி பொதுக்குழு நடைபெறும் என்று தமிழ்மகன் உசேன் அறிவித்தார். தமிழ்மகன் உசேனை அவைத் தலைவராக நியமித்தது செல்லாது என நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் ஓ.பி. எஸ்., தொடர்ந்துள்ளார்.

மும்பை

## பாலியல் வன்புணர்வில் கர்ப்பம்:

# கருவைக் கலைக்க நீதிமன்றம் அனுமதி



பாலியல் வன்புணர்வு பாதிப்புக்கு ஆளான சிறுமியின் கருவைக் கலைக்க, மும்பை உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மனுத் தாக்கல் செய்த சிறுமி, பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி கர்ப்பமடைந்துள்ளார். அவர் கர்ப்பமடைந்து, தற்போது 16ஆவது வாரம் ஆகியுள்ள நிலையில், அந்தச் சிறுமியின் பொருளாதார சூழல், மனநலம் சார்ந்து கருவை சுமப்பதில் விருப்பமில்லை. இந்தச் சூழலில், குழந்தையை பெற்றெடுத்து முறையாக வளர்ப்பது இயலாத காரியம் என்பதால், தனது கருவை கலைக்க அனுமதி வேண்டும் என்றும் இந்தக் கர்ப்பம் என்பது, அவர் விரும்பாமல் கட்டாயத்தின் பேரில் ஏற்பட்ட ஒன்றெனவும் மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனுவை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஏ.எஸ் சந்துர்கார், ஊர்மிளா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. மனு தாரரின் வாதத்தை ஏற்ற நீதிபதிகள், அரசியல் சாசன பிரிவு 21இன் கீழ் அந்தச் சிறுமிக்கு கருவை கலைக்க உரிமை உண்டு.

அந்தச் சிறுமியை கட்டாயப்படுத்தி குழந்தை பெற வைக்க முடியாது, குழந்தைப் பேறு வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை தேர்வு செய்யும் உரிமை அவருக்கு உண்டு என நீதிபதிகள் கூறியுள்ளனர்.

மேலும், மனு தாரர் ஒரு சிறார் என்பதும், அவருக்கு திருமணம் ஆகவில்லை என்பதும் முக்கிய அம்சம் எனக் கூறியுள்ள நீதிமன்றம், பாலியல் சீண்டலால் பாதிக்கப்பட்ட அவரின் மன நலனை புரிந்து கொள்ள முடிகிறது என நீதிமன்றம் கூறியுள்ளது.

இவை அனைத்தையும் முன்வைத்து பார்க்கையில், அவரின் குழந்தை அவருக்கு சுமையாக மட்டுமல்லாது, மன நலனையும் வெகுவாக பாதிக்கும் என்பதால், சிறுமிக்கு கருவை கலைத்துக் கொள்ள உரிமை உள்ளதென உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஹொங்கொங்

கடலில் மூழ்கியது கப்பல்

# 27 பேர் மாயம்

ஹொங்கொங் அருகே தென் சீன கடல் பகுதியில் 30 பேருடன் பயணித்த கப்பலொன்று நேற்று முன்தினம் (02) மோசமான வானிலை காரணமாக நடுக்கடலில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கிற்கு 300 கிலோ மீற்றர் தெற்கே பயணித்த தொழில்துறை பயன்பாட்டுக் கப்பலொன்றே இவ்வாறு நடுக்கடலில் மூழ்கியுள்ளது.

இதில் 30க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்த நிலையில், 3 பேர் மட்டுமே மீட்பு குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர் எனவும், எஞ்சியவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக ஹொங்கொங் அரசின் விமான மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



லிபியா



## அரசுக்கு எதிராக தொடர் போராட்டம்

### பாராளுமன்றத்துக்குத் தீ வைத்த மக்கள்

ஆபிரிக்க நாடான லிபியாவில், கடாஃபியின் மறைவுக்குப் பின்னர் அரசியல் குழப்பங்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன. குறிப்பாக, தற்போதைய அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் மக்கள், தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், டாப்ரட் நகரில் உள்ள லிபியா பாராளுமன்றத்தை கடந்த முதலாம் திகதி சூறையாடிய மக்கள், பாராளுமன்ற கட்டடத்துக்குத் தீ வைத்தனர்.

ஈரான்

அடுத்தடுத்து 3 சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள்;

## 5 பேர் உயிரிழப்பு, 49 பேர் காயம்

ஈரானின் ஹார்மு ஜ்கன் மாகாணத்தில் நேற்று முன்தினம் (02) அதிகாலை அடுத்தடுத்து மூன்று முறை, சக்தி வாய்ந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

அதன்படி முதல் நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளதாகவும் இதனை தொடர்ந்து சில மணிநேரம் கழித்து இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், அது ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியுள்ளதாகவும் மூன்றாவதாக ஒரு நில நடுக்கமொன்று உணரப்பட்டதாகவும் அது ரிச்டர் அளவு கோலில் 4.0 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிலநடுக்கங்களால் 5 பேர் உயிரழந்துள்ளனர் எனவும் 49



பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அப்பகுதியில் வீடுகள் பல சேதமடைந்துள்ளதாகவும், சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பெலாரஸ்

## பெலாரஸ் மீது உக்ரேன் வான் தாக்குதல்?



நேட்டோ அமைப்புடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருக்கின்றது.

அதே சமயம் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலக நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தாலும் சீனா, பெலாரஸ் ஆகிய நாடுகள் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்து வருவதால், உக்ரேன் இராணுவம் பெலாரஸ் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ நேற்று முன்தினம் (02) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "உக்ரேன் இராணுவம் ஏவிய ஏவுகணைகளை *Pantsir* வான் தடுப்பு சாதனங்களைக் கொண்டு வானிலே இடைமறித்து எங்கள் இராணுவம் அழித்துள்ளது. குறிப்பாக, மூன்று நாள்களுக்கு முன்னர் இதேபோல் இராணுவ நிலைகளை குறிவைத்து, உக்ரேன் படைகள் தாக்க முயன்றன. உக்ரேன் இராணுவத்தின் ஏவுகணை தாக்குதலானது ஆத்திரமூட்டுவதாக உள்ளது எனவும் ஜனாதிபதி லுகாஷென்கோ தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ

அகதிகளை ஏற்றிச் சென்ற வாகனம் விபத்து;

## 4 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவில் இருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற வாகனம், கடந்த 30 ஆம் திகதி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாண சோதனைச் சாவடியில் இருந்து தப்பிச்செல்ல முயன்றபோது விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஜூன் 27 ஆம் திகதி டெக்சாஸ் மாகாணத்தில் கனரக



வாகனமொன்றில் மூச்சுத்திணறி உயிரிழந்த 53 அகதிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து அமெரிக்காவுக்குள் நுழையும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

## பாகிஸ்தான் சிறையில் 650 இந்தியர்கள்

இந்தியாவில் உள்ள சிறைகளில் 309 பாகிஸ்தான் கைதிகளும் 95 மீனவர்களும் இருப்பதாகவும் அதேபோல, பாகிஸ்தானில் உள்ள சிறையில் இந்தியர்கள் 49 பொதுமக்களும் 633 மீனவர்களும் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இருநாட்டு தூதரகங்ளுக்கு இடையே 2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியும் ஜூலை முதலாம் திகதியும் இரு நாடுகளும் தங்களது சிறைகளில் உள்ள அண்டை நாட்டுக் கைதிகளின் பட்டியலை பரிமாறிக் கொள்கின்றன.

இதற்கிடையில் பாகிஸ்தான் சிறையில்



இருக்கும் இந்தியர்களை விடுதலை செய்து திரும்பி அனுப்பி வைக்க வேண்டும் என்று இந்திய தரப்பில் பாகிஸ்தானுக்கு வலியுறுத்தப்பட்டது.

மேலும், இந்திய மீனவர்கள் 536 பேர், பொதுமக்கள் 3 பேரை முன்கூட்டியே விடுதலை செய்து நாட்டுக்கு திருப்பி அனுப்ப பாகிஸ்தானிடம் வலியுறுத்தப்பட்டிருந்த நிலையில் இந்தப் பட்டியல் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.



இங்கிலாந்துக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில்

# இந்தியா முன்னிலை

இந்தியாவுக்கெதிரான பேர்மிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த ஐந்தாவது டெஸ்டின் நேற்று முன்தின இரண்டாம் நாள் முடிவில் இந்தியா முன்னிலையில் காணப்படுகின்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா, ஜேம்ஸ் அன்டர்சன் (3), மத்தியூ பொட்ஸிடம் (2) விக்கெட்டுகளை இழந்து ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 98 ஓட்டங்களையே பெற்றுத் தடுமாறியது.

எனினும் இதன் பின்னர் ஜோடி சேர்ந்த றிஷப் பண்ட்டின் 146, இரவீந்திர ஜடேஜாவின் 104 மற்றும் பதிலணித்தலைவர் ஜஸ்பிரிட் பும்ராவின் ஆட்டமிழக்காத 31 (16) ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 416 ஓட்டங்களை இந்தியா பெற்றது. பந்துவீச்சில், அன்டர்சன் 5, பொட்ஸ் 2 மற்றும் பென் ஸ்டோக்ஸ், ஸ்டுவர்ட் ப்ரோட், ஜோ றூட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து, நேற்று முன்தின இரண்டாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களையே பெற்றுத் தடுமாறி வருகின்றது. தற்போது களத்தில் ஜொனி பெயார்ஸ்டோ 12 ஓட்டங்களுடனும், பென் ஸ்டோக்ஸ் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காமலுள்ளனர். பந்துவீச்சில், பும்ரா 3, மொஹமட் ஷமி மற்றும் மொஹமட் சிராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



## விம்பிள்டன்: வெளியேற்றப்பட்ட ஸ்வியாடெக், சிட்டிபாஸ்

பிரித்தானியாவில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக், ஐந்தாம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தனது மூன்றாவது சுற்றுப் போட்டியில் பிரான்ஸின் அலிஸே கொர்னெட்டை எதிர்கொண்ட போலந்தின் ஸ்வியாடெக், 4-6, 2-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், தனது மூன்றாவது சுற்றுப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நிக் கிர்ரியோஸை எதிர்கொண்ட கிரேக்கத்தின் சிட்டிபாஸ் 7-6 (7-2), 4-6, 3-6, 6-7 (7-9) என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.



கல்முனை வலய கரப்பந்தாட்டம்:

## சம்பியனானது நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம் சம்பியனாகியுள்ளது.

பாடசாலையின் 72 ஆண்டு கால வரலாற்றில், வலய மட்ட பெருவிளையாட்டு ஒன்றில் நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம் சம்பியனாகியுள்ளது.

கல்முனை வலயத்தில் கரப்பந்தாட்டத்தில்ல் பெரும் தூண்களான நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை, கல்முனை உவெஸ்லி உயர் தர பாடசாலை மற்றும் அல் பஹ்ரியா தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளின் அணிகளை வீழ்த்தி நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மகா வித்தியாலயம் சம்பியனானது.

தங்க மற்றும் வெள்ளிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர்:

## ட்ரிபிள் செவனை வென்ற போல்டன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்படுகின்ற தங்கம் மற்றும் வெள்ளிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில், புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் புத்தளம் ட்ரிபிள் செவனை புத்தளம் போல்டன் வென்றது.



போல்டன் சார்பாக, எம்.ஆர். எம். சஸ்றான் இரண்டு கோல்களையும், எம். எச்.எம். அஸ்மிர், பி.எம். மிக்தாம், எம். ஜெதா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில், வென்ற போல்டன் தங்கக் கிண்ணத் தொடருக்குள்ளும், ட்ரிபிள் செவன் வெள்ளிக் கிண்ணச் சுற்றுக்குள்ளும் தகுதி பெற்றுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 04 ஜுலை 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.